REGD. No. 3712.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

# வகுளமாலை:

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்.

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

"கண்ணன் கழலிணை
நண்ணும் மனமுடையீர்!
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே" — வகுளாபரணர்.

"அகரமுதல வெழுத்தெல்லாமாதி
பகவன் முதற்றே யுலகு"
"தனக்குவமை யில்லாதான்றாள் சேர்ந்தார்க்கல்லான்
மனக்கவலை மாற்றலரிது" — திருவள்ளுவர்,

"உலகம் யாவையுந் தாமுளவாக்கலும்
நிலைபெறுத்தலு நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க்கே சரணங்களே!" — கம்பர்.


| தொகுதி 1. | ஈசுவர ௵ புரட்டாசி ௴ | பகுதி 9. |
| --- | --- | --- |
| Vol. 1. | OCTOBER 1937. | No. 9. |


## உள்ளுறை.


| | | | |
| --- | --- | --- | --- |
| 1. | தருமத்திட்டம். | பத்திராசிரியர். | 124 |
| 2. | திருவாய்மொழி அநுபவம். | ஸ்ரீ உபவே ஏ வி. கோபாலாசாரியார். | 129 |
| 3. | வேதாந்தவாரியன். | பாரத்வாஜி. | 131 |
| 4. | புரட்டாசிக் கேட்டைதன்னிற் புவியுதித்தோன். | ப. ரெ. திருமலை ஐயங்கார். | 132 |
| 5. | புரட்டாசிப் பூராடம் புவிவந்தோன். | மாடபூசி. | 135 |
| 6. | தேசிகர் நூற்றந்தாதி. | | 136 |



பத்திராசிரியர்:—

ஆர். கேசவய்யங்கார், M.A.B.L., அட்வகேட்

வருஷம் 1-க்கு ரூ ஒன்று] [தனிப்பிரதி அணா ஒன்றரை.

# சௌத் இண்டியன் ஸ்டோர்ஸ்,

## திருவல்லிக்கேணி.

நேர்த்தியான மளிகை சாமான் நேராகத் தருவித்து செட்டு ரெம்பக்கம்மியாக்கி சீக்கிரத்தில் கொடுக்கிறோம். நேரிலே மின்சாரத்தில் வறுத்தரைத்த காப்பியும், கடைந்தெடுத்த கட்டியான வெண்ணையும் நறுமணத்த புத்தூருக்கு மேன்மையான நெய்யும், குழையாத பழவரிசி வியன்மிக்க வமுதாகும், சிக்கிரத்தில் மாவு போல் குழைந்து போகும் ருசியான பருப்பும், பார்த்தவரும் கேட்ட வரும் பரிவுடனே வாங்கிடுவார். மிக்க புகழ் பெயர் பெற்ற பரிமளப் பாக்கு சீராக வுடைத்து உயர்ந்த நல்ல வாசனைச் சரக்கு செய்யுடனே சேர்த்து வேண்டு மட்டும் விற்கிறோம். இக்கடையில் இடைவிடாது வாங்குவோர்க்கு இக்கட்டே இருக்காது. மிக்க பல முண்டாகும். நிரம்ப அறிவும் ஊரும்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வகுளமாலை.

தொகுதி 1. Vol. 1. | ஈசுவர ௵ புரட்டாசி ௴ OCTOBER 1937. | பகுதி 9 No. 9

## தருமத்திட்பம்.

—:o:—

தன் திடமிடற்றொலி யிதென்றிடி யிடித்தே
மின்னுமிழ்தழல் விழிவிழித் தெழுதிறத்தோன்
வன்மையது கண்டொழுகு மன்னு தவரன்னான்
பொன்னடி முடிப்படு குடிப்படி கிடப்பார். (1)

சொல்லியொரு நல்லுரை சிரத்துற காத்தான்
நல்லறவிலைப்படு பொருட் படவடைந்தே
வல்வினை யகற்றியருள் உள்வழி நுழைந்தோர்
அல்வழி கழித்தொழுகு நல்வழி நிலைப்பார். (2)

சொன்ன வனிலக்கண மொருப்படு திருப்போல்
தன்னலனறத் துற திருப்படுத லென்றே
தன்னடி நிலைப்படு நலத்திருவுருத்தான்
மன்னு மகிழ்மாறனென மாதவன் மகிழ்ந்தான். (3)

தன்னிலு மறத்திரு வடித்திகழ் நலத்தோன்
மன்னுபுகழ் மாறனென மாறனிலுமிக்கான்
என்றவனு கந்தபடி யெண்ணுமதி நல்லார்
சென்று சடகோபனடி யொன்று நெறி சொல்வாம். (4)

'தருமம்' எனும் திருநாமம் தமதெனவே பூண்டு விளங்கும் திருமாலார் திருவடிக்கண்ணே நிலைபேர்க்கவொண்ணாது ஒன்றித் திகழ்ந்து அத்திருவடிதன்னையும் தமதெனத்தாமே தாங்கும் தருமத் திருமூர்த்தியே ஸ்ரீ சடகோபன் எனக்காண்டலே தரும நுட்பம் காண்டலாகும். அத்திருமூர்த்தி அருளிய தமிழ்மறையாயிரமும் "சொல்லவே சுரக்கும் அறவாவாயிரம்" என்று ஞானத்தமிழ்க்கட

லாகிய கம்பநாடர் ஈடுபட்டுள்ளார். அப்பன் தருமத்திருவடி நிலைச்சுட்டே ஸ்ரீ சடகோபனும். அன்னான் திருவடிமெய்ம்மையே "ஸத்யம்", திருவடித்திட்பமே "தர்மம்". அம்மெய்ம்மை காண்டலே "ஸத்யம்" காண்டலாகும்; அத்திட்பம் தேறுதலே "தர்மம்" தேறுதலாகும். அது கடக்கக்கடவதொன்றன்று என்றே அறவோர் அனைவரும் அத்திட்பம் தேறுநிற்பார். அத்திட்பமே சடகோபத்திட்பம். "ராமோ விக்ரஹவாந் தர்ம:" "க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்" என்றே கண்டடையப்பெறும் பரஞ்சுடரையும் தருமத்திருமூர்த்தியாக்குவர் அவன் திருப்பாதுகமாய சடகோபன் என்றது வான்மீகி திருவுள்ளம். பரன் திருவடிக்கடவாதே வழிபடுவார்க்கே 'அடியார்' என்றது திருநாமம். அடிக்கடப்பார் அடியார் ஆகார். அடிக்கடவாவழி யொன்றிய அடியோர்க்கன்றி ஏனையர்க்கு பரன் அருள் புரியான் என்றதே ஆழ்வார் அருளிச்செய்த தருமத்திருமொழி. "அறப்பொருளை அறிந்தோரார், இவையென்ன உலகியற்கை" என்றும், "உன்பொன்னடிக்கடவாதே வழிவருகின்ற அடியோர்க்கருளி" என்றும், அவ்வடிக்கடவாமை தானும் மறைவாணரை அடிபணிந்து அவர்களருளுமாறே உணர்ந்து ஒழுகப்படவேண்டுமொன்று என்றதை "வேதம்வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து இவனையிது தீர்த்துக்கொள்ளாது போய் ஏதம் பறைந்து அல்ல செய்து கள்ளுடுகலாய்த்தூய் கீதமுழவிட்டு நீரணங்காடுதல் கீழ்மையே" என்றும், தாமே யருளிச்செய்துள்ளார். இத்திறவருளிச்செயல்களின் திட்பமறியாக்கால் பரன் செங்கோலென விளங்கும் ஆழ்வாரே தருமத்திருத்தேவு என்றது அறியப்படாதேபோம். ஆக முன்னரே தருமத்தின் பான்மையும் தூய்மையும் ஐயந்திரிபற அறியப்படவேண்டும், அதை அறிவுறுத்தியவாறே ஆழ்வாரது தருமப்பெருமை கண்கூடேயாகும். உலகுநிற்பது தருமத்தேயர்தலான் மாந்தரனைவரும் அத்தருமம்தேறும் கடப்பாடுடையாராவார். கைம்மாறு வேண்டாது, கடப்பாடுதீர்த்துக்கொள்ளுமோர் தூயமுறையானே தருமம் தெளிந்தோவாதொழுகப்படவேண்டும். பரனருளும் உலகியலும் ஒன்றிஒருப்படும் திறனே அறனாகும். பரன் மெய்ம்மையே "ஸத்யம்". பரன்கோலே அறன். (தர்மம்). பரன் கோற்கண் நிற்குமதே உலகு. அக்கோற்கண் நிலையுறுதலே உலகியலாம். பரனுருட்டும் திகிரியே அறனெனப்படும். "ஏவம்

ப்ரவர்த்திதம் சக்ரம்'' என்றுபரன்தானே தனதாழியுருட்டிப்பாடியருளியதே சீதையாம். உலகுய்யுமாறே நெறிப்பாகுபாடுகளும் தொழிற்கூறுபாடுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இப்பாகுபாடுகளும் கூறுபாடுகளும் பரன்தானே வகுத்தருளியவைகள். பரன் கருத்தாலேயே நல்லதோர் நெறிக்கண்ணே நிறுத்தப்பட்டுள்ளவைகள். அந்நெறியே அறநெறியாம். அந்நெறிதானும் மாந்தர்கள் ஓர் ஞான்று தமதுடம்பாட்டான் ஓரிடத்திற்குழுமி த்தத்தமிம்மைச் சுகம்கருதி த்தொகுத்துக் கொண்டதோர் சங்கேதமன்று. நீர்மேலெழுத்துப்போல்வதோர் விழுக்காடு மன்று. அருள்சுரந்து உலகு காக்கும் பரன்தானே தனதுலகியனடாத்தற்பொருட்டே இட்டுப் போந்ததோர் கட்டளைக்கல்லாம். அவன்கருத்தால் அவ்வகுப்பறிதலே அவன் தருமவகையறிதலாகும். அவ்வகையனைத்தும் அவன் வகுத்துப்போந்தமையான் அவன்கருத்தேயாகிய மறையளவையானே அறியப்படவேண்டுமொன்ருயிற்று. இவ்வறிவு பெற்ருலல்லாது பரனை வழிபட இயலாது. பரன் வகுத்ததே வழி. வழிப்பட்டதே வழிபாடு. அவ்வழியே அறன். அறனெறிப்பட்டாலல்லாது பரன்வழிபடப்படான் தருமமே வழிப்படுத்தும். தருமமற்றது வழுப்பட்டேபோம். வழுப்படாதகே வழிபாடு. "அறத்திற்றிரியாப்படர்ச்சி வழிபாடு,'' "அறமும் அருளுடையான் கண்ணதேயாகும்.'' "அறந்தரு நெஞ்சொடருள் சுரந்தூட்டும்'', என்ற இத்திறப்பொதுப்புடைகள் கண்டுமே அருளும் அறனும் ஒன்றிநின்றமை யறியலாகும். வகுத்தானே வகுத்தவகையாதலான் அறனென்றே கற்கப்படவேண்டுமவனதோர் கட்டளைக்கல்லாயிற்ற. இவ்வறன்கற்றலே கல்வியாம். நகநிற்றலும், தாள்தொழுதலுமே கல்விப்பயன் கோடலாகுமென்பர் திருவள்ளுவனார். அறமென்றது உலகியனடாத்தற்பொருட்டு உலகத்தோரால் ஒழுகப்படவேண்டியதாதலின் உலகியலும் நன்குணரப்படவேண்டுமொன்ருயிற்று. காட்சியளவையானே அறியப்படும் உலகுநூலளவையானே உணரப்படும் தருமத்தோடொருப்படுமாறு அறிந்து பயிலப்படவேண்டியிருத்தலான் தருமஅறிவு அறிஞர்தமக்கும் மிகவும் நுண்ணியதொன்ரும் என்றது கூறவேண்டாதாயிற்று. "ஸூக்ஷ்ம: பரமதுர்க்ஞேய: ஸதாம்தர்ம:'' "கவயோப்யத்ர மோஹிதா:'' என்று பரன்தானே இந்நுட்பத்தை விரித்துரைத்தான். நுண்ணியதோர் அத்திறத்தருமம் உலகியலைநண்ணி ஒழுகப்

படாக்கால் பயன்படாதேபோம் என்றதுபெற்றும். உலகியலோ டொட்ட ஒழுகாது போந்தால், பெரியோராயினும் "லோகஸங்க்ரஹம்" எனும் அரியதருமத்தைக் கைவிட்டாராவார். உலகோ டொட்டும் உயர்நலமுடைத்தாய இவ்வருங்குணத்தையே பரனுடைய "ஆர்ஜவ" குணம் என்று நம்பிள்ளையும், தேசிகனும் விளக்கியுள்ளார்கள். (வழுப்பட்டாரை அவரோடொட்டியே நெறிப்படுத்தும் குணம் என்றது கருத்து), "லௌகிகஞாநஹீநஸ்ய வைதிகம்நைவஸித்யதி" என்ற மூதுரையின் மெய்ம்மையை தேசிகனர் வலியுறுத்திப்போந்தார் என்றது சான்றோர் கூறிவருமோர் ஐதிகம். உலகியலறியாதார்க்கு நூலுணர்வு பயன்பயக்காது என்றது அதன்பொருள். இக்காலத்தே இத்தேயத்தே யாம்வதிந்து வருகின்றோம். இந்நிலையுணர்ந்து, நூலளவையும் அறவோர் ஒழுக்கமும் கண்டு தருமநெறியானே உலகம் மேன்மைபெற்று அன்பு வளர்ந்து பரனருள் பெருகுமாறு முயன்றொழுகும் கடப்பாடுடையோம் என்றதை முன்னரே அறிவுறுத்திக்கொள்வோம். காலகதியாலும், நிலைவயத்தாலும், தேயவேற்றுமையாலும் நேரிடும் ஒழுக்கமாறுபாடு மறைநூலுடன் பட்டதேயாம் என்றது நம்தருமப்பெரியோர் பணிப்பு. "ஸநாதந" மானதருமம் உலகியலை ஒட்டியே "ததாதந" மாகுமென்றது தருமநுட்பம். இவ்வறிவும் பரன்தானேயருளும் நலங்களுள் தலைசிறந்த ஒன்றாகும். உலக அறிவை அறநூலுணர்வோடு ஒருப்படுத்துவதே தக்கோர்தகவாகும். கடல்போன்ற அறநூல்களில் வழங்கப்பட்டுள்ள சொற்களுக்குப் பகுதிவிகுதிகள் காட்டி அவைகட்குப்பொருள்கூறி அம்மட்டோடு நிற்றல், அறநெறிகாத்தலாகாது. அம்மட்டோடு நின்றார்க்கும் அகராதிநிகண்டுகட்கும் வாசியற்றேபோம். ஒழுக்கத்தாலும் தூய்மையாலும் நெறிகாக்கும் வன்மையாலும், அறிவின்மிகுதியாலும், மதிநலத்தாலும் அருளாலும், நப்பெரியோர்கள் பரன் கருத்தாகிய மறையுடன் பரன் உடைமையாகிய இவ்வுலகை ஒன்றச்செய்யும் தருமநெறியை நன்குவிரித்து வளர்த்துள்ளார்கள். உலகின்கண் அன்பே பூண்டு அருளேசுரந்து வள்ளன்மைக்கடலாய் விளங்கிய அப்பெரியோர்கள் திருவுள்ளம் கண்டு எக்காலத்திலும் எத்தேயத்திலும் யாவராலும், ஒழுகப்படுமாறு மறையாலும் அறநூல்களாலும், வகுக்கப்பட்டுள்ள கூட்டங்களுக்குள்ளேயே அவ்வக்காலத்திக்கு ஆகாதன விடுத்து ஆவன கொண்டு, உலகு வழிப்படச் செய்யும்

அறிவின் செழிப்பும் ஒழுக்கத்தின் சிறப்புமே, நன்மை பயப்பனவா மென்று புகழப்படும். மருத்துவநூல் கூறியவற்றுள்ளும் தத்தம் உடம்பினது நயம்பாடும், வயத்திறனும், வயிற்றுத்தீயளவும், கண்டே உடம்போடொட்டுமாறு உண்டிகொளலே, இன்பம் கொழிக்குமாபோல் அறநூல் வகுத்த கூட்டங்களுக்குள்ளும், உலக நயம்பாடும் உலகியலும் கண்டு உலகோடொட்டுமாறு நூலறிவு கொண்டொழுகுதலே உலகு நலம்பெறுமாறு ஒழுகப்படுதலா கும்.. இத்திறனறிந்தொழுகுதலே அறநுட்பம் அறிந்தொழுகுத லாகும். வயதின் வளர்வால் யாக்கைநிலை மாறுவதுபோல், காலகதி யால் உலகநிலை மாறுபடுமாதலின், மாறுபடுமுலகோடொட்டுமாறே அவ்வக்காலத்துக்கேற்பத் தக்கதோரறநெறிக்கண் நின்றொழுகப் படவேண்டிய அந்நெறி ஒன்றே நன்னெறியாகும். இவ்வாறு மாறு படுமுலகியலுணராது ஒட்டாச் சொல்லொலித்துப்போருமது கட லொலியாயே ஒழியும். உலகத்தோடு நன்குஒட்டும் நல்லவொழுக் கங்களைச்செழித்து வளரச்செய்யும் பெருந்தகையாளரே அருளாள ராவார். உலகோடொட்டிப்பயன் கொழிக்குமாறு ஒழுகும் தக் கோர் காத்துப்போரும் தருமநெறியே தஞ்சம் என்று உலகம் உவந்து சிரத்திற்கொண்டு செழித்தோங்கும். தருமதேவதை தானுமே அத்திறத்தக்கோர்கள் வடிவாயே சஞ்சரிக்கும். நூலறிவும் உலகஒழுக்கமும் செறிந்து செழிக்குமாறு பரன்அருள்புரிவானாக. ஈதொன்றே நன்குவலியுறுத்தப்படவேண்டியது. நல்லொழுக்கம் செழித்தோங்கிப் பரதகண்டத்துக்குக் கண்ணெனத் திகழும் நம் தமிழகத்தின் கண் வைணவம், சைவம், என்னும் இருபெருஞ்சம யப்பெரியோர்களும் தருமப்பெருமையை நன்கே விளக்கி நிலை நாட்டித் தமிழ்நல்லார்கள் அறநெறிக்கண் ஒருப்படும் வலிமையைக் குன்றாது வளரச்செய்துள்ளார்கள். எந்நாட்டினும் சிறந்தோங்கு மாறு நம்தமிழ்நாட்டில் நல்லறம் செழிக்கச்செய்துள்ள அப்பெரி யோர்கள் உள்ளம் கண்டு இயன்றவரை அந்நெறிகாக்கும் கடன் பட்டே பிறந்துள்ளோம். வைணவர்கட்கு யாண்டுமே உற்ற ஒரிறை யாய் விளங்கும் மாறனடி பணிந்துய்ந்த எம்பெருமானார் திருவுள் ளத்தை உணர்ந்து விளக்குவது எம்மனோர்க்கு வகுத்தகடனாத லான் அன்னார் திருவுள்ளம் கண்டே தருமமெனும் அவரதின்ற மாட்சியையே வரும்பகுதிகளில் இயன்றவரை விளக்கத்துணிந் துள்ளோம்.

ஊனமற ஒங்குமறை ஓதியவிடத்தும்
நூனெறிக ணூலளவறிந்த க்கடத்தும்
ஈனமற வையயியல்பீதெனவறிந்தே
மானமற மீண்டியையுமாறறிவிப்பார். (1)

மிக்காரவைக்கண்ணா முந்தேகிளத்தல்
தக்கார்கண் தாழாது தாமேதடித்தல்
திக்கேது மொக்காது தங்காலை நீட்டல்
எக்காலு மொக்காத தென்னாடிதாமே. (2)

நல்லாரவைத்தேறு நாவோதறத்தால்
சில்லென்று சொல்வாரும் சொல்லாதகல்வார்
சொல்லுண்மை விள்ளுன்னாவல்லாளர்கொள்ளும்
செல்வத்திருத்தேங்கு தென்னாடிதாமே. (3)

ஏவும்திறம் ?தறிஞரும் தவத்தோர்
மேவும் குடிச்செல்வமோம்பும் மனத்தோர்
யாவும் நெறிக்கண்ணியாக்கும் நலத்தோர்
மாவீடி தொன்றென்று மாலாருகந்தார். (4)

மின்னாழி வட்டச்சுடர் மின்னுமன்னன்
பொன்னார்பதப்பற் பினற்பே பெருக்கும்
பொனனாடி தென்றோது பண்ணார் விரும்பும்
தென்னாடறத்திட்ப மென்றும் தெரிக்கும். (5)

பத்திராசிரியர்.

———:O:———

# திருவாய்மொழி அநுபவம்.

(முன்தொடர்ச்சி.)

ப்ரஹ்மத்திற்கு வேதமும் ஸ்ம்ருதிகளும் கூறியபொருள்களான "எல்லை யற்ற பெரியது" "தன்னைப்போல் குணங்களால் பெரிதாக்குவது (அதாவது 'ப்ருஹத்த்வம்; 'ப்ரும்ஹணத்வம்) என்ற இரண்டு பொருள்களையும் இங்கே இந்த ப்ரஹ்மசாஸ்த்ரம் முதலிலேயே சாஸ்த்ரகாரர்கள் முறையை அநுசரித்து இம்முதற் பாசுரத்தின் முதலிரண்டு அடிகளால் இந்த த்ராவிடமஹாசாஸ்த்ர கர்த்தா விளக்குகிறார். ஸ்வரூபத்தாலும், குணங்களாலும் எல்லை

யற்ற, கிகரற்ற, பெரிதென்பது "ப்ருஹத்த்வம்". தன்னை ஆச்ர யித்த நல்லொழுக்க முடையோர்களையும் அப்படிக்குணங்களால் பெரிதாக்குவது "ப்ரும்ஹணத்வம்". முதலடியில் எல்லையற்ற ஆநந்தம் முதலிய கல்யாண குணங்கள், விபூதிகள், முதலியதை யுடையவனென்றும் எல்லையற்ற ஆநந்த ஸ்வரூபத்தையுடையவ னென்றும், ஜகத்துக்கு நிமித்த காரணமும், உபாதாநகாரணமும், ரக்ஷணம், லயம், மோக்ஷமளித்தல் முதலிய ஸகலவிதமான நிர்வா ஹங்களையும் செய்பவன் என்பதையும், ஆநந்தம் என்று பேசுவதால் தைத்திரியச்ருதியிலுள்ள ஆநந்த ப்ரஹ்மலக்ஷண வாக்யத்தைக் காட்டி விளக்குகிறார். ஜகத்திற்கு உபாதாந காரணம் என்பதால் எல்லாவற்றையும் வ்யாபித்துள்ள ஸ்வரூபப் பெருமையும் காட்டப் பட்டது. இரண்டாமடியால் நம்மையும் தன்னருளால் பெரிதாக் கும் ப்ரும்ஹணத்வத்தைக் காட்டுகிறார். தன்னைப்போன்ற ஞானத் தையும் ஆநந்தத்தையும் நமக்கும் மலரச்செய்யும் அருள்ஸ்வபாவத் தைக்காட்டுகிறார். முதலிரண்டு அடிகளால் "ப்ரஹ்ம" சப்தத் தின் இரண்டு பொருள்களையும் விளக்கினதும், "ப்ரும்ஹணத்வம்" என்பது பிறர்சொல்லுகிறபடி 'ப்ரஹ்மமாகவே ஆகிவிடுகிறதென் பதோ" என்று ஸந்தேஹம்வரவே, முக்தரும் நித்யரும் ப்ரஹ்மத் துக்கு சேஷர்களே, ப்ரஹ்மம் அவர்களுக்கெல்லாம் நித்யமும் அதி பதியே என்பதை மூன்றாமடியில்காட்டி முக்தியிலும் ஜீவப்ரஹ்ம பேதம் உண்டென்றும், ப்ரஹ்மம் நித்யசேஷி என்றதையும் பேசு கிறார். ஸ்வாபாவிகமான எல்லையற்ற ஆநந்தம் முதலிய குணங்களை யுடையவனும், எல்லையற்ற ஆநந்த ஸ்வரூபனும், எல்லையற்ற ஞானா னந்தங்களை எனக்கருளினவனும் (தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு அருளுமவனும்) அயர்வறுமமரர்களுக்கு அதிபதியுமானவன் என்று உடையவனை (ஸ்வாமியைக்) குறித்துவிட்டு அவன் திருவடிதொழு கையைத்தன்மனத்திற்கு அநுசாஸநம் செய்கிறார். தைத்திரியச்ருதி யில் ஆநந்தமயமான ப்ரஹ்மம் ஜகத்திற்கு காரணம் என்று ஆநந்த வல்லி ஓதிற்று. அவ்வாநந்தத்தைத் தனக்கு சமமாக முக்தருக்கும் அளிப்பதையும் ஓதிற்று. ப்ரஹ்மாநந்தம் எத்தனை பெரிதாயினும் அது முழுவதும் பற்றிலரான முக்தருக்கும் உண்டென்றது காமத் திற்கு உட்படாத ச்ரோத்ரியனுக்கும் ஸமம்என்றது. அந்த ஆநந்த மயனும், ஸூர்யமண்டலத்தில் ஸ்வர்ணமயமான சுடர்த்திருமேனி யுள்ள பரமபுருஷனும் ஒன்றே என்று அந்த ச்ருதி அறுதியிட்டது.

இங்கே ஆநந்தமயமான காரண புருஷனை வர்ணிக்குமிடத்தில் "சுடரடி" என்றதற்கு அது அடி என்பதை கவனிக்க. "நமக்குளுள்ள ஆநந்தமய புருஷனும் ஸூர்யமண்டலத்திலுள்ள பொன்மயப் புருஷனும் ஒன்றே" என்கிறவாக்கியம் இரண்டு வல்லிகளிலும் இருதரம்பேசப்பட்டது. ப்ருகுவல்லியில், "எதிலிருந்து இந்த சேதநாசேதநமெல்லாம் உண்டாகின்றதோ, எதனால் பிறந்தனவெல்லாம் ஜீவிக்கின்றனவோ, முடிவில் எதற்குள் எல்லாம் லயிக்கின்றனவோ (மோக்ஷத்தில்) எதற்குள் எல்லாம் பிரிவற்றுப்புகுகின்றனவோ, அதைவிரும்பி அறிவாயாக, அது ப்ரஹ்மம்" என்று தொடங்கி ஆநந்தத்திலிருந்தேதான் எல்லாம் உண்டாகின்றன, ஆநந்தத்தினால்தான் பிறந்தனவெல்லாம் ஜீவிக்கின்றன, ஆநந்தத்திலேயே முடிவில் லயிக்கின்றன; (மோக்ஷத்தில்) பிரிவற்று ஒடுங்குகின்றன" என்று ப்ருகுவல்லியில் ஓதப்பட்டது. இந்த லக்ஷணங்களையெல்லாம் மூன்று அடிகளால் காட்டிவிட்டு "அதை விரும்பியறி" என்ற மேல்வாக்கியத்தின் பொருளை "அதைத் தொழுதெழு" என்று அருளிச்செய்கிறார்.

ஏ. வி. கோபாலாசாரியார்.

---

# வேதாந்தவாரியன்.

'சீரொன்று தூப்புற்றிருவேங்கடமுடையான், பாரோன்றச் சொன்ன பழமொழியுள் — ஓரொன்று, தானேயமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு, வானேறப்போமளவும் வாழ்வு' என்பதோர் பொய்யில்பாடல். ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனை வித்தகன், வேதியன், வேதாந்ததேசிகன், தூப்புல்மெய்த்தவன், உத்தமன், வேங்கடநாதன், வியன்கலைகள் மொய்த்திடுநாவின் முழக்கொடுவாதியர் மூலமறக்கற்றவன் என்று உண்மையாகப் புகழ்வர் ஸ்ரீ நயினாராசாரியர். தென்சொற்கடந்து வடசொற்கலைக்கெல்லை தேர்ந்தவர் மறைமுடித் தேசிகனார். இவர் தம்மை 'சந்தமிகு தமிழ்மறையோன்'; 'தூப்புற்றோன்றும் வேதாந்தகுரு'; 'வேதாந்த வாரியனென்றியம்ப நின்றோம்". என்று கம்பீரமாகக் கூறிக்கொள்வதெல்லாம் பண்டைத் தமிழர் மரபை அநுஸரித்த தெனக் . வடமொழியினும் தென்மொழியை விசேடமாகப் பரிபாலித்தவர் வேதசிரத் தேசிகனார்.

ஆழ்வார்களிடம் இவருக்குள்ள ஈடுபாடு எல்லையற்றது. தந்தையென நின்ற தனித்திருமால் தாளிற்றலைவைத்தோம் சடகோபனருளினாலே; வேதியர் தாம் விரித்துரைக்கும் விளைவுக்கெல்லாம் விதையாகுமிது'; 'பாவளருந்தமிழ்ப் பல்லாண்டு இசையுடன் பாடுவமே'; 'பண்ணுலகிற்படியாத விசையாற்பாடும் பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே'; 'பண்ணமருந்தமிழ் வேதமறிந்த பகவர்களே'; 'மாசில் மனந்தெளி முனிவர் வகுத்ததெல்லாமாலுகந்தவாசிரியர் வார்த்தைக் கொவ்வா' என்பன இவண் அநுஸந்தேயம். கண்ணனிடம் இவருக்கு விசேட ஈடுபாடுள்ளதை நன்கு அறியலாம். அறியாதவிடைச்சியரும் 'என்ற பாசுரத்தைக் காண்க. சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் பேராற்றலுள்ளவர். இவரது கவி நயம் கண்டு அநுபவிக்கவேண்டியது, 'முத்திக்கருள்கூட மூன்றைத்தெளி முன்னம், இத்திக்கிலேற்கு மிதம்'; 'மூன்றிலொரு மூன்று மூவிரண்டு முன்னான்கும், தோன்றத் தொலையுந்துயர்' என்பன சூத்திரங்களாய் நின்று இவர் கவிவன்மையை வெளிப்படுத்துகின்றன. 'இவர்கள் செய்ய தமிழ் மாலைகள் நாம் தெளியவோதித் தெளியாதமறை நிலங்கள் தெளிகின்றோமே' என்பதன் ஸாராம்சத்தைத் தக்கசான்றுகளுடன் பேரறிவாளர் எடுத்துணர்த்துவாராக. புரட்டாசித் திருவோணத்தில் தூப்புல் ஐயன்வந்திலனேல் ஆழ்வார்கள் அருளிச்செயல்களின் சீர்மையை அறிய விரகில்லை. 'ஏற்றிமனத்தெழில் ஞானவிளக்கையிருளனைத்தும் மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு மாயனுங்காணகில்லான்' என்பது மெய்யுரையே. போற்றியுகப்பதும் புந்தியிற்கொள்வதும் பொங்கு புகழ்ச்சாற்றி வளர்ப்பதுஞ் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே என்றபடி தேசிகனார் பிரபந்தங்களை ஐயமறக் கற்று, பிறருக்குமறிவித்து, அவர் உபதேசமொழிகளைப் பின்பற்றி நடந்தால் அமலன் அருள் பூர்ணமாக உண்டாகும்.

பாரத்வாஜீ.

---

## புரட்டாசிக்கேட்டை தன்னிற் புவியுதித்தோன்.

திருநாராயணபுரம் என்ற திருப்பதியில் கலி 4480-ம் (கி. பி. 1378) வருஷத்தில் ஸித்தார்த்தி நாமஸம்வத்ஸரம் புரட்டாசி

மாசம் சுக்லபஞ்சமி குருவாரம் ஜ்யேஷ்டா நக்ஷத்திரம் தனுர் லக்கினத்தில் கிடாம்பி ஸ்ரீரங்காசாரியரின் பௌத்திரரான ஸ்ரீகேசவாசார்யர் என்ற அந்தணச்ரேஷ்டருக்கு நாடு செய்த தவப்பயனால் ஒரு புத்திரர் அவதரித்தார். இவருக்கு ஸ்ரீநிவாஸாசாரியரென்று திருநாமமிடப்பட்டது. த்ராவிடாசாரியரென்று பரம்பரையாக ப்ரஸித்திபெற்ற தமது தந்தையிடமே பஞ்ச ஸம்ஸ்காரங்களைப் பெற்று ஸ்ரீபகவத் விஷயத்தையும் காலக்ஷேபம் செய்தார். பிதாவின் அநுமதியின்பேரில் ஸ்ரீநடாதூரம்மாள் பௌத்திரரான. கடிகாசதம் அம்மாள் என்று கீர்த்தியுடன் விளங்கிய வாத்ஸ்ய வரதாசாரியரிடம் ஸ்ரீபாஷ்யம் முதலிய ஸம்ப்ரதாய கிரந்தங்களை காலக்ஷேபம் செய்தார். திருநாராயணபுரத்தில் யதுகிரியிலுள்ள ஒரு பிலத்தில் எழுந்தருளியிருக்கும் யோகாநந்த ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் யோகம் அப்யஸித்து ஸாதனமும் பெற்றார். செங்கணுளியிட்டிறைஞ்சும் சிங்கவேள்குன்றுடையான் ஒரு யதிரூபியாய் எழுந்தருளி ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியருக்கு இருபதாவது திருநக்ஷத்திரமான பகுதான்ய வருஷம் புரட்டாசி சுக்லபஞ்சமி உதய காலத்தில் ப்ரேஷமந்த்ரத்தை உபதேசித்தருளி ஸந்யாஸாச்ரமத்தையும் யதாக்கிரமமாய்ப் பண்ணிவைத்து, ஸ்ரீசடகோபஜீயரென்று தாஸ்ய நாமமும் பிரஸாதித்தருளி அந்தர்தானமானார். ஸ்ரீமதகோபில நரஸிம்மமூர்த்திகளுள் ஒருவரான ஸ்ரீலக்ஷ்மிந்ருஸிம்ஹன்ஸ்வாமியின் விசேஷ ஆராத்ய தெய்வமானான். ஸ்வாமிக்கு ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் என்பது முழுத்திருநாமம். 'தண்புகழ்சேர் மாறனுரை சாற்றிடுவோன்' என்றும், 'சீர்பெரும்பூதூர் முனியே சகத்துதித்தோன்' என்றும், 'இரகசியத்ரயசாரத்தின் ரசமுரைப்போன்' என்றும் போற்றப்படுதலால் ஆழ்வார், எம்பெருமானார், திருவேங்கடமுடையான் இம்மூவருமே சடகோபமாமுனிவனைத் திருவவதாரித்தாரென்பது மிகையாது. பண்புடைய வம்மாள் தன் பரிவுக்கிலக்காகி பாஷ்யத்தைப் பலகாலும் பகுத்துரைத்தபண்பாளர்; பொன்பெயரோன் மார்பிடந்தான் புகழுரைப் பதே தமக்குப்போது போக்காகப்பெற்ற பெற்றியர்; இரகசிய முப்பத்திரண்டும் ரசித்துரைக்கும் நாவினர்; இம்மாமுனிவர். இன்றும் ஸ்ரீஸந்நிதியில் ஸ்ரீபாஷ்யம், ஸ்ரீபகவத்விஷயம், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம் காலக்ஷேபம் நடந்துவருவதைக் காணகலாம். 'ஸ்ரீசடகோப ஸ்ரீ:' என்றே சமஸ்த வைதிகலௌகிக விவகாரங்களிலும்

திருவெழுத்துச்சாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. ஆதிப்பிரான் தன் திருநாமத்தை இவர் பட்ட விலக்ஷணமான பரிசிரமத்திற்காக இவருக்கு வழங்கினன். 'வண்' என்ற அடைமொழியின் அழகு நன்கறியப்படவேண்டும். ஸ்ரீரங்கநாச்சியார் ஸந்நிதியின் முன்பே ஸ்ரீதேசிகனுக்குத் தனிக்கோவில் கட்டுவித்தது இந்த ஸ்வாமிதான். ஒருபால் மேட்டழகியசிங்கர். ஒருபால் கம்பர் மண்டபம். இங்கன்றோ கம்பராமாயணம் அரங்கேற்றப்பட்டது. தசாவதாரன் ஸந்நிதியைக்கட்டி அதிலே திருமங்கை மன்னனை ஸ்தாபித்தார். பேரருளாளன் ஸந்நிதியிலுள்ள நூற்றுக்கால் மண்டபம், திருமலையில் ஸோபானம் முதலிய ஸ்வாமி ஏற்படுத்தியவை. ஸ்ரீராமாநுஜ சித்தாந்தத்தை இமயம் முதல் கன்னியீருக நன்ருக பிரவசனம் செய்து தனக்குப்பின்னர் ஸ்ரீலக்ஷ்மிந்ருஸிம்ஹன் ஆராதனத்திற்காகவும், சேதனேஜ்ஜீவன வ்யாபாரத்தை நடத்துவதற்காகவும் தமது சிஷ்யர்களிற்றலைவரான திருமலை நம்பாக்கம் கிருஷ்ணமாசார்யர் என்னும் ஸ்வாமிக்குத்துரியாச்ரமம் அளித்து அவரை இந்த ஆஸ்தானத்தை நிர்வஹித்து வருமாறு நியமித்தருளி கலி 4560 பஹுதான்ய வருஷம் சித்திரை மாதம் கிருஷ்ண ஏகாதசியில் தம் அவதார க்ஷேத்திரமான திருநாராயணபுரத்திலேயே இந்த லீலா விபூதியைவிட்டு நித்திய விபூதியை அலங்கரித்தார்.

ஸ்ரீ அஹோபிலமடத்தின் பெருமை ஆதிசேடனலும் பூர்த்தியாகக்கூறவொண்ணுதது. அன்று தொட்டின்றுகாறும் இவ்வாஸ்தானத்துக்கு எழுந்தருளியுள்ள அழகியசிங்கர்கள் அருமை பெருமைகளும் அளவிட்முடியாதன. தற்போது ஆஸ்தானத்தை அலங்கரித்துக்கொண்டிருக்கும் நாற்பத்தொன்ரும் பட்டத்து அழகிய சிங்கர் பல்லாண்டு பல்லாண்டாய் எழுந்தருளியிருந்து எம்மனோரைக்கிருபையுடன் பரிபாலித்து வரும்படி அகடிதகடின ஸாமர்த்யனை அரிமுகன் அருளுமாறு பிரார்த்திக்கின்றனம்.

'ஓங்குமலை வாழ்க அகோபிலந்தான் வாழ்க  
பாங்காய்ச் சடகோபன் பாவாழ்க—பூங்கமலந்  
தன்னையணிதாராய் சடகோபமாமுனியே  
இன்னமொரு நூற்றண்டிரும்'.

ப. ரெ. திருமலை ஐயங்கார்.

# புரட்டாசிப்பூராடம் புவிவந்தோர்.

புரட்டாசித்திங்கள் மிக பவித்ரமானது. ஆலமர் வித்தின் அருங்குறளான ஸ்ரீவாமனஜயந்தி, திருவேங்கடமுடையான், தூப்புற்கோன், ஸ்ரீஅஹோபிலமடஸ்தாபகர், திருக்குடந்தை தேசிகன் இவர்களது அவதார தினங்களும் இம்மாதத்தில் வருவதால் இத்திங்கள் இணையற்றதாக விளங்காநிற்கும். மேலும் சகல கலாவல்லியின் பூஜை, விஜயதசமி இவற்றைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள நவராத்திரி, மாளயபக்ஷம் இவையும் இம்மாதத்திற்றான் வருகின்றன. இங்ஙனம் பெருமைவாய்ந்த கன்னி மாதத்தில் பூராட நக்ஷத்ரத்தில் 'திருக்குடந்தை தேசிகன்' என்று பாரோரால் பண்பாகப் புகழப்படும் ஸ்ரீகோபாலார்ய மஹாதேசிகன் அவதரித்தார். இவர் சம்மதமாஞ்சரணநெறி சாதித்த அப்புள்ளாரின் திருவமிசத்தில் அவதரித்த ஸ்ரீகிருஷ்ண தேசிகனின் திருக்குமாரர். ஓங்குதுலாப் பூராடத்துதித்த செல்வன் சேனையர்கோன். ஐப்பசியிற் பூராடத்தவதரித்தோன் தமிழ்மறை யாறுயிரத்தாற்றகவுரைத்த திருக்குருகைப்பிரான் பிள்ளான். ஜ்ஞானம், அநுட்டானம், வைராக்கியம் என்ற முந்நிதியும் முந்துறநிற்கும் முகுந்தனருள் முழுமையும் பெற்ற வித்தகரும் அருட்கடலா யெதிராசரடிபணிந்த செப்பமிகு வேதாந்தச்சீரறிந்த திருக்குருகைப்பிரான் பிள்ளான் பணித்துள்ள ஆறுயிரப்படிக்கு இருபத்திநாலாயிரப்படி என்னும் அழகிய வியாக்கியானம் அருளிச்செய்தவருமான ஸ்ரீவேதாந்தராமாநுஜ மஹாதேசிகனிடத்தில் இக்குடந்தை தேசிகன் ஆச்ரயித்தார். உத்தமர்உவக்கும் உத்தர ஸாராஸ்வாதினியும், பராங்குசனே பரனென்று பற்றின மொய்த்த பொழிற்றிருக்கோளூர் வந்த வள்ளல் பத்தியொடு பாடிய கண்ணிநுன் சிறுத்தாம்புக்கு அழகியதோர் வியாக்கியானமும், அனைவரும் அறிந்து அநுட்டிக்குமாறு ஆஹ்நிகம் முதலான அரிய கிரந்தங்களையும் அருளிச்செய்தார் இக்கன்னிப் பூராடத்துதித்த குடந்தைக்கோ. முக்கியமாக மறைமுடித்தேசிகன் சம்பிரதாயத்தை இம்மலர்தலையுலகில் மாண்புறச் சய்த மஹாநீயர் என்னலாம்படி தாமின்புறுவது உலகின்புறக்கண்டு காமுற்ற கல்வியாளர் இவ்வாசார்ய சிகாமணி. பெரியாரைப்போற்றிப் புகழ்தலே பெருமையடையும் வழி.

மாட்பூசி.

ஸ்ரீ:
ஸ்ரீமதேராமாநுஜாய நம:

வயலூர் — கந்தாடை மன்னப்பங்கார்
அருளிச்செய்த

# தேசிகர் நூற்றந்தாதி.

---

## வடமொழித்தனியன்கள்.

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞானவைராக்ய பூஷணம்
ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்த தேசிகம். (1)
யச்சக்ரேநிகமாந்தார்ய ஸ்துதிம் காதாசதாத்மிகாம்
மன்னப்பங்கார பிக்பந்தம் ஆச்ரயே தேசிகப்ரியம். (2)

## வெண்பாத்தனியன்.

சீரொன்று தூப்புற்றிருவேங்கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் — ஓரொன்று
தானேயமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப்போமளவும் வாழ்வு. (1)

## கொச்சகம்.

பழவினைகடாமகலப் பரவாதி சிங்கத்தின்
கழலிணையைத் தன்னெஞ்சிற் கழலாமே எந்நாளும்
தொழுதெழு மன்னப்பங்கார் தூயமலர்த்தாளிணையே
தொழுதெழு நீ நன்னெஞ்சே தொல்வினைகள் தொடராவே. (2)

## வெண்பா.

எந்தை மன்னப்பங்கா ரென்றைக்குந் தன்னுமம்
சிந்தைதனில் வைத்திடவே செல்வஞ்சேர் — தந்தையொடு
தாயாகிக் காப்பரிந்தத் தாரணியிலுள்ளாரை
வாயார வாழ்த்து நலம். (3)

## நூல்.

வேதமுடித்தேசிகனே வேதியர் குலத்தரசே
சாது சனங்களுக்குத் தாவளமே — போதமரும்
நின்னடியை யென்று நினைந்திருப்பார் பாதமென்றன்
சென்னிதனிற் சூடு மலர். 1.

மலர்மகள் கோன்றாளிணையை மன்னியிருப்பார்கள்
சிலரவராற் செய் கருமமென்னும் — மலமறுசீர்
வேதாந்த தேசிகனை வேறாகாதேத்துவார்
பாதாம் புயநமக்குப்பற்று. 2.

பற்றொன்று மின்றிப் பராங்குசனையே பற்றுஞ்
சித்தமுடை வேதாந்த தேசிகனைக் — குற்றமில்லா
அன்பாலடைபவர்கட் காளாகு மன்பரே
யென்பாலிருப்பரிசைந்து. 3.

இசைந்தேன் மனமிவரையேத்த வெப்போதும்
கசிந்து கரையும் முளமென் செய்கேன் — பசுந்துளவ
மாலையான்றன்னிலு மன்னினரே வண்டறையுஞ்
சோலை சூழ்தூப்புலிறை. 4.

இறையுமெமக்காயிருள கற்றுந்தேசாய்க்
கறையில் குணங்கொள் கடவுளோனாய் — மறையனைத்தும்
வாழ்வித்த வாதியர்சீய மிவ்வையகத்தில்
ஆழ்துயரெல்லா மறுக்கு மாய்ந்து. 5

ஆய்ந்த புகழ் மங்கையர்கோனம் புயத்தாளிணையிற்
சாய்ந்த மனத்தராய்த்தம்மடியார்க் — கீய்ந்த
பெருங்குணத்த ரெம்மைப் பெருகு மருளால்
விரும்புவர் வேதாந்தகுரு. 6.

குருமாமணியே குலவுவரை மார்பன்
திருமாமகள் கணவன்றன்னைத் — திருவானாய்
நின்றாலுமென் வாக்கே நீள் சோலைத்தூப்புல் வரும்
குன்றாக்குணத்தனையே கூறு. 7.

கூறாது நாவேறுகொண்டு பிறவற்றை நெஞ்சங்
தேறாது சென்னி வணங்காது — சேறாரும்
நீள்வயல் சூழ் தூப்புனகர் நின்மலனார் தேசுடைய
தோளல்லது தொழா தோள். 8.

தோளாயிர முந்துணித்தன்று வாணன்றன்
மாளாத செல்வத்தை மாற்றினான் — தாளொன்றும்
தான் வணங்கி யான் வணங்கத்தன்னை யளித்தருளும்
வானருளான் றூப்புல் வளல். 9.

வள்ளன் மணிவண்ணன் மாயன் பவக்கடலில்
அள்ளலழுந்து மெமை யாதரித்துக் — கள்ளமனம்
தீர்த்துத்தன் சேவடியைச் சிந்திக்கச் செய்வதற்கே
பார்த்துதித்தான் றூப்புற் பரன். 10.

பரனாரணனவன் பார்தத்திற் காட் செய்கை
உரமிவ்வுயிர்கட் கென்றோரார் — சிரமத்தைத்
தீர்க்கவே வேதாந்த தேசிகனாய் வந்துதித்து
மார்க்க மிதுவென் றுரைத்தான் மால். 11.

மாலாயடியவர் பான் மாநிலத்தில் வந்துதித்து
நால்வேத மெய்ப்பொருளா நாரணனும் — சால
அருள்செய்த வேதாந்தவாரி யரோடொவ்வான்
இருளனைத்து மீங்க கற்றியே. 12.

அகற்றி வினையனைத்து மந்தமிறஞ்சீராற்
சகத்திற் சதிராக வெம்மை — உகப்புடனே
உய்விக்கும் வேதாந்த தேசிகரா முத்தமரை
வைம்மின் மனந்தனில் வைகல். 13.

வைகல் கவிவாதி சிங்க மறையவரைக்
கைகலந்து நாமங் கருதினால் — செய்கருமம்
ஈதொப்ப தில்லை யிங்கிப்படியே யங்கமெனச்
சாதுசனங் காட்டுஞ்சதிர். 14.

சதிருடையோம் யாமென்றுந் தம்மை யெண்ணி யிங்கே
எதிரெமக்கி யாரென்று மெண்ணி — மதியில்லா
மானிடர்களந்தோ மயங்குவதே வாதிசிங்கந்
தானிருக்கவிங்கே சதிர்த்து. 15.

சதிர்த்தாரவர் காண்மின்றாரணியின் மீதில்
எதிர்த்தாரு மிப்பவ நீங்க — மதிப்பார்
கவிவாதி சிங்கத்தைக் காதலுடன் கண்டு
புவியிடத்துப் புண்ணியரானார். 16.

ஆனாரி வரார் தாமந்தமில் பேரின்ப
வானாட்டமரரோமற்றவரோ — தேனாரும்
பங்கயத்தாணாதன் போற்பாடும் புகழுடைய
எங்கவிஞர் சிங்கத்தின்பா. 17.

இன்பம் பெறலாமிமை யோர்த நற்பதமும்
அம்புவி யோடாளலா மாங்கே — செம்பவள
வாயான் மலர்ப்பதத்தான் வண்மையுடைவேதாந்த
தேசிகனைச்சிந்திப்பார்க்கின்று. 18.

இன்று நிகமாந்த தேசிகனை யெண்ணுவார்
ஒன்றுமடையாருறு துயரம் — குன்றெடுத்த
மாயன் மலரடிக்கீழ் வாழ்ச்சி பெறுவரே
மாயும் வினையனைத்து மற்று. 19.

மற்றொன்றுஞ் சேரா மனக்கவலை மானிடர்க்குச்
சித்தந் தெளியுஞ் சிறப்புடனே — குற்றமில்சீர்
தூப்புனகர் வந்துதித்த தூய மனத்தரையே
சேர்ப்பரேல் சிந்தை தனித்தே. 20.

தேறு மனக்கலக்கஞ் சிக்கென வாந்தேசும்
மாறு மறமனைத்தும் வண்புகழோர் — கூறும்
குணத்தன் குளிர்சோலைத் தூப்புனகர்க் கோமான்
குணத்திற் குருகு மென்னெஞ்சு. 21.

நெஞ்சு நெகிழ்ந்து நினையாமன் மற்றொன்றை
அஞ்சும்படி யாக வுள்ளடக்கி — வெஞ்சுடரோன்
சோதி யெனத் தோன்றுந்தொல் புகழ்சேர் தூப்புனக
ராதியையே காண்பரன்பர். 22.

அன்பராயாதரிக்கு மாரியர்காள் போற்றுமின்
இன்ப மிகுவேதியர்களேத்தவே — அம்புவியில்
வந்துதித்த வள்ள லெதிராசன் வண்புகழே
சிந்திக்குந் தூப்புனகர்ச்சிங்கம். 23.

சிங்கமுகத்தானைத் திங்கள் பலகாட்டும்
அங்கமுடையவனை யாதரிக்கும் — எங்கள் பிரான்
தூப்புல் வருமாரியனைத் தோத்திரியா மானிடர்க்குக்
கரப்பனைத்து மாகுங்கடை. 24.

கடைந்தான் கடலைக் கடல் வண்ணன் முன்னம்
இடந்தான் பின்னேன மாப்பூமி — அடைந்தார்
வருத்த மறக்காக்குமே வையத்தருளால்
திருத்தமுடைத் தூப்புல் வாழ் தேவு. 25.

தேவர் முனிவர்களுஞ் சித்தர்களும் பத்தர்களும்
பூவின் மழை பொழிந்து போற்றியே — தாவி
யுலகளந்த மாலை யுணர்ந்துகக்குந் தூப்புற்
குலகுருவே யெங்கள் குரு. 26.

குருவுங் குலத்தரசுங் குற்றமிலாச் சுற்றந்
தருமமுந்தாய் தகப்பனும் — வருபுனல் சூழ்
தூப்புல் வருந்தூய் மறையோன் றெல்லருளே யென்றிந்தக்
கோப்புடையோம் யாமென்றே கூறு. 27.

கூறிமுடியாக் குணத்தனை நன்னெஞ்சமே
நாறுதுழா யானை நண்ணுமோர் — வீறுடைய
தூப்புலனந்தாரியனார் தொல்புகழ் சேர்மைந்தனை நீ
மூப்புவரு முன்னமே பற்று. 28.

பற்றியடி யிணையைப் பாவித்து நல்வடிவைச்
சுற்றிக்குணங்களையே சொல்லிப் — பத்தியுடன்
நிற்றியேனீ மனமே நீள்வயல் சூழ் தூப்புலிறை
முத்தி யருளு முயன்று. 29.

முயன்று முகுந்தன் மலரடி மேலன்பால்
பயந்துறந்தார் பார்த்திருக்க முன்னம் — உயர்ந்த
திணிவான் மணிமாடத் தூப்புல்வந்த சோதி
பணிவோம் யாம் போமே பயம். 30

பயம[illegible]யினமாயும் பாவங்கள் வீயுஞ்
சயமனைத்துந்தாமே கைகூடும் — துயரொன்றும்
வாராது வண்மையால் வாதிசிங்க மிங்குதித்த
சீரொன்று சிந்திப்பரேல். 31.

சிந்தித்து வாதிசிங்கத் தேசிகர் தம் வடிவை
வந்திந் தவர் மலர்ப் பாதத்தைப் — புந்தியில்வைத்
துள்ளுவாருள் ளத்துறையுமே யும்பர்கோன்
தெள்ளியார் சிந்திக்குந்தேசு. 32.

தேசுடைய வாழியுஞ் சங்கமுங்கையேந்தி
வாச மலர்த்துழாய் வாழ்மார்பன் — காசினியிற்
காண நின்றுலுங் கவிவாதி சிங்கனையே
காணக்கருது மென்கண். 33.

கண்ணவரையே காணும் காதவர் சீரே கேட்கும்
எண்ணம்வர் தொல்புகழேயெண்ணும் — திண்ணம்
கவிவாதி சிங்கக் கடவுளையே நண்ணி
அவியாத காதலடைந்து. 34.

அடைந்து மடநெஞ்சே யன்பாலவனைக்
கிடந்து மலரடியின் கீழே — தொடர்ந்தென்றும்
தூய மலர்ச்சோலைசூழ் தூப்புனகர் வந்துதித்த
மாயவனையே வணங்கி வாழ். 35.

வாழ்ச்சி யிது நெஞ்சே வாதிசிங்கத் தேசிகர் தம்
காழ்ச்சி யுனக்குண்டா மேற்கன்மந் — தாழ்ச்சியொன்றும்
சாராவகை தீருஞ் சன்மத்துயர் தொலையும்
சீரார் சிரீதரனைச் சேர்ந்து. 36.

சேரும் புகழோன் திருவத்தியூர் வரதன்
காரொத்த வண்ணன் கழலிணையைத் — தார்மன்னுஞ்
சென்னியில் வைத்தென்றுஞ் சிறக்கு மணிதூப்புல்
மன்னனை யென் னெஞ்சமே வாழ்த்து. 37.

வாழ்த்திக் கவிவாதி சிங்கன் மலரடியைத்
தாழ்த்தித் தலையை யதன் கீழே — சூழ்த்தென்றும்
தொல்புகழே சிந்திப்பார் சூழ்வினையை மாற்றுவரே
நல்வினையா நானிலத்திலீது. 38.

ஈதே யுயிர்க்கிதமு மெத்தவமு மெய்பொருளும்
ஈதே பேரின்ப மிகு வீடும் — தீதறுசீர்த்
தூப்புனகர் வந்துதித்த தொல் புகழ் சேராரியன்பேர்
கோப்புடனே கூறுவதாமுற்று. 39.

உற்றுநின் சேவடியை யுய்வதோர் காரணததால்
பற்றென்று மின்றிப் பவக் கடலின் — தொத்தறுப்பார்
வேதமுடித் தேசிகனே வேத விழுப்பொருளாம்
மாதவனை நண்ணுவரே மன். 40.

மன்னு மறையனைத்து மாகுருவின் பாற்கேட்டாங்
குன்னிய தனுட் பொருள்களத்தனையுந் — துன்னுபுகழ்
பெற்றூ லுந்தூப்புற் பெருமானை நண்ணுதார்
கற்றூரே காசினியில் வம்பு. 41.

வம்பார்குழன் மாதர்வான் கலவியாசை தன்னால்
அம்பாய பட்டலைந்து நின்றேனைத் — தன்பாத
தாமரை மேற்காதலையே தந்தடிமை கொண்டருள்வான்
தூயமனன் றூப்புலவனின்று. 42.

இன்றுமுதல் யாவரையுமெண்ணே னிறையென்று
சென்று சேணாடர் மிகப்போற்றக் — குன்றெடுத்த
வேங்கடமால் வித்தகத்தால் வேதாந்த தேசிகனாய்
ஈங்குதித்த வேற்ற மறிந்து. 43.

அறிந்தறிந்து நற்கலை களாய்ந்தப் பொருளிற்
செறிந்த பெருஞ் சிந்தையராய்ச் செவ்வே — சிறந்தபுகழ்த்
தூப்புனகர் வந்துதித்த தூய்மனத்தன் பாதமே
காப்பென்பார் காப்பரென்றும். 44.

என்று மினியெமக் கோரின்பக்கதி யிதுவே
குன்றமெடுத்தபிரான் குற்றமில்சீர் — நன்றாக
வேத்துங் கவிவாதி சிங்கரையே யெப்பொழுதும்
நாத்தழும்ப நாமுரைப்போ நன்று. 45.

நன்றிதுவாந் தீததுவாமென்றொன்று நன்கறியா
தின்றறுதியாகவே யென்னெஞ்சம் — வென்றிமிகும்
வேதமுடித் தேசிகனை வேறாக வேத்தியபின்
தீதில் மதி பெற்றதிப் போதீது. 46.

ஈதேயாம் வேண்டும் பயனிதுவே சாதனமும்
ஈதே மற்றெல்லா மெமக்கென்று — சாதுவராய்த்
தண்புனல் சூழ் தூப்புற் கோன்றாளிணையே நண்ணுவார்
மண்மிசை வாழ் வானவரே மற்று. 47.

மற்றொன்றும் யான் வேண்டேன் மானிடர்காண் மாநிலத்துக்
குற்றமில் சீர்த்தூப்புனகர்க் கோமான்றன் — எத்திசையும்
கொண்டாடி யேத்துங் குணங்களுக்கே யெஞ்ஞான்றுந்
தொண்டானேன் றோற்றாவினை. 48.

வினையனைத்துந் தீரும்ம வேமேதுயரம்
மனை மனைவி பாசையுமாளுமே — தனையுணர்ந்து
செங்கமல நாபனையும் சேராமே வாதி
சிங்கரைத் தன் சிந்தைதனிற் சேர்த்து. 49.

சேர்ப்பரேற்றந் நெஞ்சிற் சிக்கெனவே சீராருந்
தூப்புனகர் வந்துதித்த தூயவனைக் — காப்பரவர்
காசினியிலுள்ளாரைக் கன்ம மறுத்திட்டு
மாசில் மன மெய்தவும் வைப்பார். 50.

வைப்பார் மனந்தன்னின் மாநிலத்து மாதவத்தோர்
எப்பொழுது மெங்கள் பெருமானை — அற்புதமாந்
தேசுடைய வேதாந்த தேசிகனைச்சீர் மிகுந்த
மாசின் மதியுடையோர் வாழ்வு. 51.

வாழ்விதுவேயுந் தமக்கு வம்மினுலகத்தீர்
தாழ்வெங்கும் வாரா தளர்ச்சி நில்லா — சூழ்வினைகள்
சேரச்சிதைந்திடுமே திண்ணமிது வாழ்த்துமினோ
ஆரணத் தேசிகரை யாய்ந்து. 52.

ஆய்ந்துரைக்கலாமணி களாழ்கடலுளித்தனை யென்
ருய்ந்துரைக்கலாம மரர்கோன்புகழும் — ஏய்ந்தசீர்
வேதமுடித்தேசிகனுர் வீறுடையவண் குணங்கள்
ஓதமுடியா வெவர்க்கு மோர்ந்து. 53.

ஓராரறத்தை யுணரார் பெரும் பொருளைப்
பாரார் பயனுனை வின்பத்தைச் — சீராரும்
வீட்டையும் வேண்டாரே வேதாந்த தேசிகர் தம்
பாட்டினைப்பாடு மவர். 54.

அவரவர் தந்த மறிவளவின் மாலைத்
தவநெறிகளால் வணங்கிச் சார்வார் — எவரேனும்
தூயமறையோர் வணங்குந் தூப்புநகர்க் கோமானை
மேயறிவான் மேவுவரே யிங்கு. 55.

இங்கிருந்தாலேத மென்னெனக் தமக்கு வாதிசிங்கர்
செங்கமல பாதமுஞ் சீர்வடிவும் — அங்கமலக்
கைகளும் வாயுங் கருணைமிகு கண்ணிணையும்
கைகனிபோற் காணக்கூடில். 56.

கூடிலவர் குணத்தைக்கூறவே யெந்தமக்குத்
தேடிலவர் பதத்தைச் சென்னிதனிற் — சூடத்
துலங்கொளி சேர் தூப்புல் வருந்தூயோனருளால்
வலங்கொள்பத மெய்தலாம் வான். 57.

வானிற்றிகழு மதியோ கதிரவனோ
ஊனமிலா வோமத்தொளிபழலோ — மாநிலத்தில்
சோதியவை மூன்று மொன்றாய்த் தோன்றினவோ தூப்புனகர்
வாதி சிங்கத் தேசிகராய் வந்து. 58.

வந்து கருணையால் வானவர் கோன் வன் படைகள்
ஐந்து மனைத்துலகு முய்யவே — செந்தார்க்
கவிவாதி சிங்கராய்க் காசினியைத் தேசிற்
றவிவின்றித் தாங்கின தாம். 59.

தாங்கி யுலகனைத்துந் தானருவாய் நின்றபிரான்
ஓங்குபுகழ் வேங்கடக் கோனுந் தமக்குத் — தீங்கேதும்
வாராத வண்ண மிவ்வாதி சிங்க ராயினான்
பாருலகீர் பாங்குடனே வந்து. 60.

வந்தென்றன் வன்னெஞ்சின் மன்னியிருந்தானை
எந்தை யெதிராச ரிணையடியைக் — கொந்தலரும்
சோலை சூழ் தூப்புனகர் வந்துதித்த தூயவனைக்
கால மெலாங் காண்பன் களித்து. 61.

களிக்குமதென்று கொலோ கண் களாற்கண்டு
துளிக்கு நறுந்துழாய்க் கண்ணி — ஒளிக்கொளும்
அண்டர் கோனென்ன வடியார்க் கருள்புரியும்
கொண்டலார் தூப்புற் கோவை. 62.

கோவைக்கனி யொத்த வாயுங்குளிர்விழியும்
தாவந் தவிர்க்கு முறுவலும் — பாவந்தீர்
வேதமுடித் தேசிகன்றன் மெய்யொளியு மேவாதார்
சாதுவரைக் காணார் தளர்ந்து. 63.

தளர்த்தி மற்றொன்றத்தரித்து நீ நெஞ்சே
கிளர்த்தியுடன் கேடில் சீரானை — அளத்தற்
கரியானை யம்மானை யன்புடனே தூப்புற்
பெரியானை யெப்பொழுதும் பேசு. 64.

பேசுமினோ கூச்சமின்றிப் பேரின்பம் வேண்டினீர்
தேசுடைய செந்தாமரையடியைப் — பாசமொன்றும்
நில்லாது தூப்புனிமலனையே நாடோறும்
சொல்லாதார் சூழ்வினை தோற்றார். 65.

தோற்றுதவர்க்கேதுந் தொல்வினை யெஞ்ஞான்றும்
மேற்றான் வருவது மொன்றுண்டோ — ஆற்றாத
ஆர்வத்தால் வேதமுடியாரியனைப் பற்றுகையே
சீருற்றவீட்டிற் சிறப்பு. 66.

சிறப்பு முயிர்க்கிதுவே சேமமு மீதே
அறப்பொருளுமாம் வீடு மீதே — மறப்பின்றி
மன்னியசீர் தூப்புல் வரு மாமறையோன் பாதத்தைச்
சென்னிதனிற் சேர்ப்பதுவே செவ்வி. 67.

செவ்வியராய்ச் செங்கண்மால் சேவடியைச் சேவிப்பார்
அவ்வப்பயனை யடைந்திடுவார் — அவ்வாறு
சிந்தைதனிற் றூப்புல் வந்த தேசிகனை நண்ணுவரேல்
அந்தமில்வீட்டின்ப மவர்க்காம். 68.

அவர்க்காந் தெளிவிசும் பிலந்தமில் பேரின்பம்
எவர்க்கேனு மித்துணி வுண்டாகில் — எவர்க்கும்
கவிவாதி சிங்கரல்லாற் காப்பார் மற்றில்லை
அவமாமற்றோர் பேசுஞ்சொல். 69.

சொல்லார் சுருதி முடித் தேசிகன் றொல்புகழை
எல்லா விடத்திலு மெப்பொழுதும் — நல்லார்கள்
கோட்டிதனிற் கூட்டமேற் கோதின் மனத்தீருமைக்
காட்டினில வாக்குவதே கா. 70.

காரீரும் மாருயிரைக் கைகுழிக்துபோகாமே
பாரீருலகியலைப் பாங்குடனே — வாரீர்
சுருதி முடித் தேசிகனைத் தூய்மனத்தராகிப்
பரிவுடனே பாவித்திரும். 71.

இரும் பொழில்சூழ் தூப்புல்வரு மெம்பெருமா
னரும் பெறலாவானை மற்றார்க்கு — விரும்புவார்க்
காரா வமுதை யனைத்துலகும் போற்றிசெயும்
சீரானைச் செப்புதல் சேமம். 72.

சேமங்கொடுப்புற் றிருவேங்கடமுடையான்
தாமன்பினுற்சமைத்த நற்கலைகள் — ஆமென்
றறிந்தார்ப்பிவாரறியாதாரிங்குப்
பிறந்தார் பெரும் பாரமாய். 73.

பெரும்பாரம் பூமிக்குப்போக வுதித்திங்
கரும்பாவமெந்தமக்குத்தீர்த்த — சுரும்பாரும்
நீள்சோலைத்தூப்புனிமலனார் தம்முடைய
தாளே நமக்கென்றுஞ்சார்வு. 74.

சார்வு நமக்கென்று சாது சனந்தாமேத்துஞ்
சோர்விரோதாரம்மை மைந்தனைஞ் — சீர்மிகுந்த
வாதி சிங்கத்தேசிகனை வாழ்த்தாத மானிடரே
சாதிகளிலொன்றிலுங் கூடார். 75.

கூடார் வினைகளுடன் கொண்டிரார் துன்பத்தைத்
தேடார் சிரீதரனையன்றியே — நாடாரே
சீர்மல்கு வேதாந்த தேசிகனைப் போற்றியே
பாருலகிற் பாங்கொடுவாழ்வார். 76.

வாழ்வாரவரெங்கும் வையகத்தார் போற்றத்
தாழ்வொன்று மின்றித்தளர்ச்சியாச் — சூழ்வினைகள்
வேருடனே போக்குவரே வேதாந்த தேசிகன்பேர்
சீருடனே சிந்திப்பரேல். 77.

சிந்தித்தடங்குமோ செங்கமலப்பூவுதித்த
அந்தமில் சீர் மங்கை தனக்கன்பன் — கந்தமிகு
தண்டுழாய்த்தார் மாரபன் போலத் தமர்க்கென்றும்
கொண்டல் கவிவாதி சிங்கக்கோ. 78.

கோவாகிவானவர்க்கு குற்றமில்லாத் தொல்லருளால்
ஓவாது வேங்கடத்தி லோங்கி நின் — றுவாவென்
றெம்மை யளிப்பானிரும் பொழில்சூழ் தூப்புல் வரு
செம்மையுடைவாதி சிங்கத்தேவு. 79.

தேவாசுரர்களுக்கே சுடைய வானவரும்
பூவுலகிற் புண்ணியரும் போற்றிசெய — மூவுலகுக்
கீசனெழில் வேங்கடக் கோனேரார் திருமணியிக்
காசினியைக் காக்குமே வந்து. 80.

காக்குமென்றுமெம்மைக் கருக்குழியில் வீழாமே
தீர்க்கும் வினையனைத்துஞ் சேராமே — ஏற்கும்
பெரும் புகழோனீசன் பிறந்தான் சிறந்த
சுரும்பமருஞ்சோலைசூழ் தூப்புல். 81.

தூப்புனகர் நாதன்றலங்கொளிசேர் சேவடியே
காப்பென்னக்கன் மங்கழியுமே — மூப்பில்லா
இன்பம் பெருகுமே யிப்புவியிலெவ்வுயிர்க்கும்
துன்பமது தொலையுமே. 82.

தொலையாத தொல்வினைகள் சூழ்பவவாழி
சிலையாற்சிதைக் கவற்றோ விந்து — துலையில்லாக்
கோதில் புகழாரியர்கள் கூறுங்குணமிக்க
வாதிசிங்கர் மன்னருளாலன்று. 83.

மன்னருளால் வாதிசிங்கரிங்குரைத்த நற்கலைகள்
உன்னியுணர்ந்திட வல்லவர்கள் — தன்னுஞ்
சுருதி முடியுட்பொருளைச் சோராதறிவர்
அருமையா மற்றோரறிவு. 84.

அறிவரோவாழ்வாரரு மறையின் சீரை
நெறிதானினைந்திட வல்லாரோ — சிறியராய்
வேதமுடித்தேசிகன்றன் வீறுடைய நற்கலைகள்
ஓதி யுணராதவர். 85.

உணரார் மறைப்பொருளை யுத்தமரைச்சேரார்
பணவாளரவணைப்பள்ளி — புணர்வானைப்
போற்றியெழாரந்தோபுல்லியராய் வாதிசிங்கர்
மாற்றமறியா மனிசர்மாய்ந்து. 86.

மாய்ந்து மாய்ந்திவ்வுலகின் மன்னிய பல்பிறப்பிற்
றோய்ந்துழல் வீர் சொல்லுகேன் வம்மினோ — ஆய்ந்தொருகால்
வேதமுடித்தேசிகனார் மெய்யுரையை நண்ணினால்
பாதகங்களோடும் பறந்து. 87.

பறக்குமே பாவம் பவக்கடலும் வற்றும்
இறக்குமே இவ்வுலகிற்றுன்பம் — மறப்பின்றி
வாதிசிங்கர் வார்த்தைகளை வைப்பரேற்றந்நெஞ்சிற்
கோதில்குணங் கொண்டிருக்கலாம். 88.

கொண்டிருக்கலாமே குறைகடல்சூழ் வையகத்தை
விண்டலத்தில் வீற்றிருக்கலாமே தான் — தொண்டுபட்டுத்
தொல்புகழ்சேர் தூப்புல்வந்த தூய்மறையோன் செய்தகலை
அல்லும் பகலு மறிந்து. 89.

அறிந்து மறையோராரணத்தின் பொருளைச்
சிறந்த மனத்திற்சேமித்துப் — புறந்தொழார்
வண்பொழில் சூழ் தூப்புனகர் வந்துதித்தவாதிசிங்கர்
எண்பெரிய சீர்மொழி கண்டார். 90.

கண்டார் கரையைக்கடந்தார் பவக்கடலை
அண்டாத வார்வ மடைந்திட்டார் — வண்டாரும்
கொந்தலர் பூந்தூப்புல்வருங்குற்றமில் சீர்வாதிசிங்கர்
செந்தமிழ் நூல் சிந்தித்தவர். 91.

சிந்தித்தவர் மொழியைச்சிந்தாதே நாடோறும்
வந்தித்தவர் மலர்ப்பாதத்தை — அந்தமில்சீர்
தூப்புனகர் வந்துதித்த தூய் மறையோர் தொல்லருளால்
கோப்புடனே யாங்களித்தோமின்று. 92.

இன்றறிந்தோ மெந்தமக்கோரின்பமிலை யீதன்றி
இன்றறிந்தோ மெய்த்தவமுமீதென்றே — குன்றாத
தொல்புகழ் சேர்தூப்புல் வாழ்தூயன் மலர்ப்பதத்தை
நல்குவதே நாளும் பிற. 93.

பிறவித்துயரறும் பேரின்பஞ்சேரும்
குறையொன்றுமில்லாக்குணத்து — மறையவர்கள்
போற்றுமிக்க வாதிசிங்கப்புண்ணியரையல்லாது
தோத்தரித்துச் சொல்லாதவர்க்கு. 94.

சொல்வது முன்னுமந்தொழுவது முன்பாத
நல்குவது முன்னுடைய நற்குணமே — தொல்லருளுக்
கெம்மையிலக்காக்கி யீனமாமெம்பரிசு
செம்மைசெய் தேசிகனே யின்று. 95.

இன்றென்றன் பாக்கியமோவேரார் வரதகுரு
நன்றான தொல்லருளோ காரணன்றன் — குன்றாத
நன்னினைவோ நானின்று வாதி சிங்கர் நல்லடியை
மன்னுமனம் பெற்றவிதம். 96.

தம்மை வணங்கினர்க் கென்ஞான்றுந் தம்முடைய
தன்மையளிக்கு மிராமாநுசர்போல் — உம்மை
வணங்கு மடியேற்கு வாதி சிங்கரே நீர்
இணங்கும்வகை யருள்வி ரின்று. 97.

என்றுமெமக்கு நீ யீன்றெடுத்த தாய் தந்தை
நன்றளிக்கு நற்குருவு நற்கதியுங் — குன்றெடுத்த
மாயனைப் போன் மற்று மறை மகுட தேசிகனே
தூய மனத்தோர்க்கு நீ தேவு. 98.

தேவரோடு முனிவர் தேசுடைய யோகியரு
மேவி யடி பரவு மெய்த்தவனே — காவிமலர்க்
கண்ணார் மயக்கிற் கலங்கா வகையருளாய்
கண்ணாளா தூப்புற் கனி. 99.

கனிவாய்க்கவிவாதி சிங்கரிப்பார்க்கோர்
நுனியார் திகிரிபோ னாக்கப் — பனிபோலக்
கூருயிற்றன்றே குமதி கடங்கோ துகுலம்
விறுடைத்தே வேதமுடி 100.

வேதாந்த தேசிகர் திருவடிகளே சரணம்.

——:o:——

ஸ்ரீ:

# திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

**சங்க வித்வான்கள்.**

1. ஸ்ரீ உபவே தில்லையம்பூர் வெங்கடாசார்ய ஸ்வாமி.
2. ஸேது ஸமஸ்தான வித்வான் ஸ்ரீ உபவே. ஆர். ராகவய்யங்கார் ஸ்வாமி.
3. ஸ்ரீ உபவே மு. ராகவய்யங்கார் ஸ்வாமி.
4. ஸ்ரீ உபவே. ஸ்ரீரங்கம் சடகோபாசாரிய ஸ்வாமி (மாம்பலம்).

**தலைவர்** ... ஸ்ரீமான் ஆர். கேசவய்யங்காரவர்கள்.

**உப தலைவர்கள்.** ...

1. ஸ்ரீமான் வி. நரஸிம்மாசாரியாரவர்கள்.
2. ,, ஆர். சந்தானகிருஷ்ணய்யங்காரவர்கள்.
3. ,, யஸ். லக்ஷ்மி நரஸிம்மாசாரியாரவர்கள்.

**காரியதரிசியும், பொக்கிஷதாரரும்.** ஸ்ரீமான் ப. ரெ. திருமலை ஐயங்கார்.

**கமிட்டி மெம்பர்கள்.**

1. ஸ்ரீமான் ஆர். இராமசாமி ஐயங்காரவர்கள்.
2. ,, யஸ். கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள்.
3. ,, டி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கள்.
4. ,, ஏ. வெங்கடாசாரியாரவர்கள்.
5. ,, வி. ஷண்முகசுந்தர முதலியாரவர்கள்.
6. ,, யஸ். குமாரசாமி செட்டியாரவர்கள்.
7. ,, இ. கே. சபாபதி முதலியாரவர்கள்.

**காரியாலயம்** ... 42-ஏ. வெங்கடரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி.

**முக்கிய நோக்கங்கள்.**

1. தமிழைப் பரவச் செய்தல்.
2. வாரந்தோறும் திருக்குறள் கம்பராமாயணம் முதலிய தமிழ் வகுப்புகள் இலவசமாக நடத்தல்.
3. தமிழ்ப் பெரியார் ஜன்ம தினங்களைக் கொண்டாடல்.
4. தமிழ் வித்வான் பரீக்ஷைக்குப் போகுமவர்களுக்கு வேண்டிய ஒத்தாசை செய்தல்.
5. சங்கவெளியீடாக ஒருபத்திரிகை நடத்தல்.
6. பிராசீனசம்பிரதாய முறைகளைக் காப்பாற்றத்தக்க ஏற்பாடு செய்தல்.
7. புலவர்களைப் போற்றுதல்.
8. திருநாட்களை நன்கு கொண்டாடல்.

ப. ரெ. திருமலை ஐயங்கார்,

காரியதரிசி.

Printed at the Lakshmi Kantha Press, 405, High Road, Triplicane
and published by P. R. Tirumalai Ayyangar at 42-a, Venkatrangam Pillai St,. Triplicane, Madras.